**தலைப்பு 317 – வட மத்திய மாகாண சபை - 2023**

-----------------------------------------------------------------------------

**1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் செயற்பணி**

-----------------------------------------------------------------

**1.1 தூரநோக்கு**

-----------------

அபிவிருத்தியின் பிரதிபலன்களை அனுபவிக்கும் பெருமைமிக்க மக்களைக் கொண்ட மாகாணத்தனை தேசத்திற்கு வழங்குதல்

**1.2 பணிக்கூற்று**

-----------------

அனைத்து பிரிவினர்களதும் சிறந்த பங்களிப்புடன் மாகாணத்தில் காணப்படும் அனைத்து வளங்கள் மற்றும் சாத்துயக்கூறுகளது உகந்த பாவனையின் மூலமாக மாகாணத்தின் மனிதவள அபிவிருத்தியினை முதன்மையாகக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி நுழைவினை வெளிப்படையுடன் கூடியதாக மாகாணத்தினை அபிவிருத்தி செய்து தேசிய அபிவிருத்திக்கு நேரடியாக மற்றும் பரந்தளவில் பங்களித்தல்

**1.3 செயற்பணி**

----------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுதல்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

------------------------

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

----------------------------------------------------

2023 ஆம் ஆண்டின் போது வட மத்திய மாகாண சபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 32,515,000,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 27,977,076,680 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாட்டில் சேமிக்கப்பட்ட தொகை ரூபா 4,537,923,320 ஆக இருந்ததடன் அது மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 14 சதவீதம் ஆகும்.

| செலவினம் | 2023.12.31 இல் உள்ளவாறு தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டெழுபவை | 28,331,000,000 | 24,970,426,680 | 3,360,573,320 | 12 |
| மூலதனம் | 4,184,000,000 | 3,006,650,000 | 1,177,350,000 | 28 |
| **மொத்தம்** | 32,515,000,000 | 27,977,076,680 | 4,537,923,320 | 14 |

## 03. கணக்காய்வு அவதானிப்புக்கள்

317 தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.